**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**நாள். 23.01.2026.**

**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.</u>**
**<u>அசல் வழக்கு எண். 94/2024</u>**

2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 23ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாக்கியலட்சுமி | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| க/பெ | : | ராதாகிருஷ்ணன் | வயது | : | 56 |
| ஊர் | : | பெரும்புலிமேடு | தொழில் | : | விவசாயம் |

**<u>வா.சா. 1 (பாக்கியலட்சுமி): வாதி தரப்பில் முதல் சாட்சியின் முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் **வாதி தரப்பு முதல் சாட்சி (வா.சா.1) ஆவேன்.** எனது வாக்கு மூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். எனக்கு எழுத படிக்க தெரியும். அதில் உள்ள சங்கதிகளை நான் படித்துப் பார்த்துதான் கையொப்பம் செய்தேன்.

**கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

1.12.02.2008 தேதியிட்ட வாதியின் தகப்பனார் கோபால் பிள்ளை இறந்ததற்கான இறப்புச் சான்றிதழின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. 26.09.2019 தேதியிட்ட வாதியின் தகப்பனார் கோபால் என்பவரின் வாரிசு சான்றிதழின் இணையம் மூலம் பெறப்பட்ட கணினி நகல் **வா.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3.12.04.2022 தேதியிட்ட வாதியின் தாயார் கோதாவரி இறந்ததற்கான இறப்பு சான்றிதழின் கணினி நகல் **வா.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. தாவா சொத்து குறித்து 01.01.1950 முதல் 31.12.1974 வரை உண்டான வில்லங்க சான்றிதழ் அசல் **வா.சா.ஆ. 4**ஆக குறியீடு செய்யப்படுகிறது.
5. தாவா சொத்து குறித்து 01.01.1975 முதல் 28.08.2024 வரை உண்டான வில்லங்க சான்றிதழ் இணையம் மூலம் பெறப்பட்ட கணினி நகல் **வா.சா.ஆ. 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
6. 27.07.2024 தேதியிட்ட வாதி 1, 2 பிரதிவாதிகளுக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ. 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. வாதி கொடுத்த அறிவிப்பினை 1ம் பிரதிவாதி பெற்றுக் கொள்ளாமல் திருப்பி அனுப்பிய அஞ்சலுரை **வா.சா.ஆ. 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 05.08.2024 தேதியிட்ட வாதி கொடுத்த அறிவிப்பினை 2ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ. 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 21.02.2000 தேதியிட்டஇணையம் மூலம் பெறப்பட்ட அடமான கடன் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10.09.06.2020 தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள இணையம் மூலம் பெறப்பட்ட பட்டாவின் கணினி நகல் **வா.சா.ஆ. 10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. 15.05.2013 தேதியிட்ட 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த இணையம் மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12. 01.07.2015 தேதியிட்ட 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த கிரய பத்திரத்தின் இணையம் மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(வா.சா.ஆ.1 முதல் 12 வரையுள்ள ஆவணங்கள் கணினி நகல் என்பதால் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)**

**(கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

K NALEENI
Digitally signed by K NALEENI
Date: 2026.01.23 19:34:28 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு